247

தாரண வருஷம் பங்குனி - சித்திரை மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 4
ஸஞ்சிகை - 4

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம்।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே॥"

பக்கம்

விஷய ஸூசிகை :—1. திருப்பாவை 27
2. நம் தற்கால நிலை 29
3. ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம் 31
4. செய்திகள் 33
5. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 35

ஸ்ரீ:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 7, பக்கம் 224-ன் தொடர்ச்சி]

16. நாயக னாய்நின்ற நந்தகோப னுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக் கறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
...பால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மாநீ
...லைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

JL
Q22 ms211, N41
N45.4.4.
2/0136

... நந்தகோபனுடைய கோயில் காப்பானே—எங்களுக்கு ஸ்வாமி ...யிருக்கும் நந்தகோபருடைய அரண்மனையைக் காக்குமவனே! ... சரணமா யிருப்பவனுடைய சரணம் (வாஸஸ்தானம்) இவனால் ...தால் இவனுடைய ஏற்றம் சொல்லிய தாயிற்று. இப்படிப் பொது ...னே' என்று சொன்னதை விசேஷித்துக் குறிக்கிறார்கள் 'கொடித் ...வாயில் காப்பானே' என்று. அரசனின் ஆளுகைக்கு அடையாளமா ...டப்பட்டிருக்கும் பெரிய கோபுர வாயிலைக் காக்கிறவனே! என்றபடி. இத

னால் மற்றைப் பக்கங்களிலுள்ள ரக்ஷகர்கள்போல் அல்லாமல் எல்லாவற்றுக்கும் ப்ரதானமா
யுள்ள கொடி நாட்டப்பட்ட வாயிலைக் காக்கும் அதிகாரம் இவனுக்கு அமைந்திருப்பதால்,
இவனே மற்றெல்லா த்வாரபாலகர்களிலும் சிறந்தவன் என்றேற்படுகிறது. 'நாயகனாய்
நின்ற' என்றதாலும், 'கொடித் தோன்றும்' என்றதாலும், நந்தகோபருடைய நாயகத்வம்
எப்போதும் அபங்குரமாய் ஸுப்ரதிஷ்டிதமா யிருக்கிற தென்பதும், அம்மாதிரியே அவரு
டைய த்வஜமும் நித்யோந்நதமாய் ப்ரகாசிக்கிற தென்பதும் ஸூசிதம். 'வாயில் காப்பா
னே' என்றதால், வாய்க்கு உதடுகள்போல் இவ்வில்லுக்கு வாய்போன்ற இந்த ப்ரதான த்வா
ரத்தைக் காக்குமிவனுக்கே புகத் தகாதவரைத்|தடுப்பதும் புகத் தகுந்தவரை விடுவதும் கடை
மையென்பது ஸூசிக்கப்பட்டது. மணிக் கதவந் தாள் திறவாய்—மணிக் கொத்துக்கள்
தொங்குகிற கோபுர வாசற் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து எங்களை உள்ளே புகவிடு. ஏனெ
னில்: மாயன் மணிவண்ணன்-திவ்ய சேஷ்டிதங்களை யுடையவனும் இந்த்ர நீல ரத்நம் போ
ன்ற திருமேனியை யுடையவனுமான ஸ்ரீ க்ருஷ்ணன், ஆயர் சிறுமியரோமுக்கு நென்னலே
அறைபறை வாய்நேர்ந்தான்—சிறு வயதுள்ள இடைப் பெண்களாகிய எங்களுக்குக் கை
யினால் வாசிக்கும் பறை யென்கிற வாத்யத்தைக் கொடுப்பதாக நேற்றே வாக்குக் கொடுத்
திருக்கிறான். மார்கழி மாஸத்தில் காத்யாயநீ வ்ரதத்தை அநுஷ்டிப்பவர்கள் அவ்ரதம்
முடிவாகும் காலத்தில் பறை முழங்கிக்கொண்டு அவப்ருத ஸ்நாநத்துக்குச் செல்வது
வழக்கமானபடியால், அதை யநுஸரித்து நாங்கள் இப்போது எங்கள் வ்ரத ஸமாபந காலத்
தில் அவப்ருதத்துக்குப் புறப்பட்டிருப்பதால், அதற்கு வேண்டிய பறை வாத்யத்தை
ஸ்ரீ க்ருஷ்ணனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்காக வந்திருக்கிறோம். அவனும் ஏற்
கெனவே அதை எங்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்திருப்பதால், எங்களை அரண்மனைக்
குள் நீ புகவிடவேண்டும். இக்காலத்திலும் மார்கழி மாதம் கடைசீ திநமாகிய போகிப்
பண்டிகை யன்று இரவில் சிறுவர்கள் பறை முழங்குவதை நாம் காண்பதால்,
இத்தென்னாட்டு வழக்கத்தை வைத்தே ஆண்டாள் இவ்விதம் கூறினார் போலும்.
'மாயன் மணிவண்ணன்' என்று பகவானைக் குறித்ததால், அவனுடைய விசித்ர சேஷ்டிதங்
கள் வாயிற் காப்பானுக்குத் தெரியு மாதலால், இவர்கள் சொல்வது உண்மையா யிருக்கு
மென்று அவன் நம்பவும், க்ருஷ்ணனுடைய திவ்ய திருமேனியில் இவர்கள் ஈடுபட்டவர்க
ளாகையால் இவர்களுடைய அபீஷ்டத்துக்குத் தடைசெய்யக்கூடாதென்று எண்ணவும்
இட முண்டாகிறது. தூயோமாய் வந்தோம் - பரிசுத்தமாய் வந்திருக்கிறோம். வ்ரதாநுஷ்
டாநத்துக்கு வேண்டிய நியமங்களுடன் அதை அநுஷ்டித்து அதன் பலத்தை க்ருஷ்ண
னிடம் பெறவேண்டியதற்காக அவனது அநுக்ரஹத்தை ப்ரதீக்ஷித்து வந்திருக்கிறோம்.
எங்கள் திறத்தில் வேறுவிதமான சங்கை பண்ணவேண்டிய தில்லை. மற்றைக் காமங்க
ளொன்றும் மனத்திற் கொள்ளாமல் பகவானது க்ருபையை வேண்டியே நாம் வந்திருப்ப
தால் நாங்கள் த்ரிகரண சுத்தி யுடையவர்கள். எங்களைத் தடுக்காமல் உள்ளே க்ருஷ்ணன்
ஸந்நிதாநத்தை நெருங்கவிடு. இப்போது பொழுது விடியாததால் அகாலமென்று எண்ணாதே.
நாங்கள் க்ருஷ்ணனுக்கு ஸ்ரோத்ரு மநோபிராமமாய் ஸுப்ரபாதம் பாடி அவனைத் துயி
லெழுப்புவதான நற்கைங்கர்யம் செய்யவேணு மென்கிற அவாவுடன் வந்திருப்பதால்,
இதுவே நாங்கள் உள்ளே புகுதற்கு யுக்தமான காலம். இவ்வாறு ந்யாயோபந்யாஸம்
பண்ணி அவனுக்குத் தங்களிடம் சங்கையில்லாமற் செய்து, பிறகு அவனுடைய மநஸ்ஸை
அபிமுகமாக்குவதற்காக விநயத்துடனும் ப்ரீதியுடனும் ஸம்போதிக்கிறார்கள். அம்மா நீ
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே—தாயைப் போல் எங்கள்மீது வாத்ஸல்யமுடைய
நீ முதல் முதல் உன் வாயால் மறுத்துச் சொல்லாதே. 'முதற் கோணல் முற்றும்
கோணல்' என்றபடி, விடியற் காலத்தில் முதல் முதல் நீ எங்களுடைய ப்ரார்த்தனையை
மறுத்தால், பின்பு எங்களுக்கு ஒன்றும் கைகூடாமலே போய்விடும். இதைச் சற்றுக் கவ
னித்து நீ எங்கள் கோரிக்கைக்கு இணங்கவேணு மென்று விநயத்துடன் கேட்டுக்கொள்ளு
கிறோம். நேய நிலைக் கதவம் நீக்கு—ஒன்று சேர்ந்திருக்கும் இரண்டு கதவுகளைப் பிரித்து
விடு. 'நேயம்' என்கிற பதம் இணை என்பதுபோல் த்வந்த்வத்தைக் குறிக்கிறது. 'நிலைக் கத
வம் நேயம் நீக்கு' என்றும் அந்வயிக்கலாம். இதற்குக் கதவுகளின் சேர்க்கையை விலக்கு
என்பது பொருள். விடியற்கால மாகையால் மிதுநங்கள் பிரியவேண்டியது ப்ராப்த மாத
லால், கவாடமிதுநத்தை விகடநம் பண்ணுவது யுக்தமேயென்று ஸூசிதம். 'நிலைக் கதவம்'
என்றதால், இவைகள் நிலைநிற்கும் ஸ்தாவர மாதலால் ஸ்வயம் சேரவும் பிரியவும் அஸமர்த்
தமா யிருப்பதுபற்றி, அவைகளை இரவில் யுக்த காலத்தில் சேர்த்துவைத்த நீயே அவைகளை
இப்போது பிரியவேண்டிய காலத்தில் பிரித்துவிடவேண்டு மென்று த்யோதிதம், 'நேயநிலை'
என்கிற சப்தத்தை ப்ரயோகித்ததால், அவைகள் ஸ்வபாவத்தில் ஸ்நேஹமுடையவைகளா
யிருக்கிறபடியால், எங்கள் ப்ரார்த்தனைக் கிணங்க எண்ணியபோதிலும், ஸ்வயம் சலிக்க
அசக்தியால் உன்னுடைய ஸ்பர்சத்தை அபேக்ஷிக்கின்றன வென்பது கருத்து. ஆகையால்
இவைகளைச் சேர்த்தியினின்றும் பிரிக்கிறேனே என்கிற உத்வேகம் உனக்கு வேண்டாம்
என்றும் தாத்பர்யம். மேலும் சேஷபூதர்களா யிருக்கும் எங்களை எமது சேஷி யுகந்த
கைங்கர்யத்தைச் செய்வதினின்றும் தடைசெய்து, ப்ரதிபந்தமாய் நிற்கும் தாமஸ ப்ரக்ருதி
களான இந்தக் கவாட மிதுநத்தைப் பிரிப்பது தோஷமாகா தென்றும் கொள்ளத் தகும்.

'நீ வாயால் மாற்றாதே' என்றதால், பகவான் ஏற்கெனவே எங்களுக்குப் பறை யளிப்பதாக வாக்தானம் பண்ணியிருப்பதால், அதை நீ மாற்றிவிடாதே என்று ஸூசித்ததாயிற்று. 'தாமுந் கொடார் கொடுப்பார் தம்மையு மீயாவகை சேமஞ் செய்வாரும் சிலருண்டு' என்றபடி, பல வ்ருக்ஷத்தண்டை யணுகவொட்டாமல் தடுக்கும் அடைமுள் கோஷ்டியில் நீ சேரத் தகாது என்று தாத்பர்யம். பகவான் தான் இஷ்டப்பட்ட போதிலும் தனக்கு அந்தரங்கரான பாகவதர்கள் வாயினால் கூடாதென்று தடுத்துவிட்டால் அவர்களுடைய வார்த்தையைப் பொய்யாக்கக் கூடாதென்கிற கவலையை வஹிப்பவராதலால், உன் வாயால் நீ மறுக்காதே என்றும் த்யோதிதம். இங்கு ஆண்டாள வடபெருங் கோயிலுடையானது திருக்கோயிலையே நந்தகோபர் திருமாளிகையாகப் பாவித்து த்வாரபாலகர்களை முதலில் ப்ரார்த்தித்து, அவர்களுடைய அநுமதியைப் பெற்ற பிறகு, பகவானை ஸேவிக்க ஸந்நிதிக்குள் ப்ரவேஶிக்கவேண்டு மென்கிற ஶாஸ்த்ரார்த்தத்தைத் தோற்றுவித்தார் போலும். ஏலோ ரெம்பாவாய்-முன்போல். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

2/10/36

நம் தற்கால நிலை

ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், வித்வான், M.A., L.T.

நம் ஸ்ரீ வைஷ்ணவ தர்சனம் இப்பொழுது இருக்கும் நிலைமையைக் கண்ணுற்றால், நெஞ்சங் கலங்கி வருந்தாமலிருக்க முடியவில்லை. தக்க முறையில் ப்ரசாரம் இன்மையால் நம் ஸமூஹத்திலேயே பலருக்கு, 'நம் ஸித்தாந்த மென்ன? அதனுடைய நுண்ணிய கொள்கைகள் என்ன?' என்னும் விஷயங்கள் மனத்திற் சென்றதாகவே தெரியவில்லை. பலவித இடையூறுகளையும் பொருட்படுத்தாது ஏதோ சில லௌகிகர்கள் தங்கள் உத்யோகத் தொந்தரவுகளுடன், ஆத்மார்த்தமான விஷயங்களில் ஈடுபடுதலைச் சிறிது தேறுதலாக வைத்துக்கொண்டு முன்னேறி வருகின்றனர். அவர்களுக்கும், அவர்களுடைய நிலைக்கு இறங்கி இரங்கி உபதேசிக்கும் ஆசிரியர்கள் இல்லை. இதற்குக் காரணம், தக்க மத போதகர்கள் இல்லாமையே. ஆசிரியர்களை உண்டு பண்ணும் ஸ்தாபநங்கள் கிடையா. இருந்தாலும், லோகோபகாரமாய் வெளிப்போந்து மதப்ரசார வாழ்வில் ஈடுபடும் வள்ளல்கள் இல்லை. என்னே வ்யஸநிக்கத்தக்க நிலை! இதற்கெல்லாம் அடிப்படையாக, ஸ்ரீ வைஷ்ணவர்களாய், ஶ்ரிய:பதியின் தொண்டையே ஆபரணமாய்ப் பூண்டவர்களான நம்மிடை ஒற்றுமை யில்லை; ஒற்றுமை மனப்பான்மையும் பூர்ணமாய் வரவில்லை. நம் ஸ்ரீ வைஷ்ணவக் குழந்தைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அநாயாஸமாகத் தங்கள் க்ரஹண சக்திக்கு அநுஸாரமாய், எத்துணைச் சமய உணர்ச்சியை அவர்கள் அறிகிறார்கள்? ஒன்று மில்லை. அவர்களுக்கு நம் அழகிய மதத்தை எடுத்துரைக்க ஸ்தாபநங்கள் இல்லை. அவர்களை நிர்ப்பந்தமாக அஸ்தாபநங்களுக்குச் செல்லச் சொல்ல ஆற்றலுடைய அதிகார ஸ்தாபநங்களு மில்லை. ஐயோ! இப்படிப்பட்ட பல்லாயிரக் கணக்கான பாலர்களுடைய கதி யாதாகுமோ? வேத சாலைகளையும் ப்ரபந்த ஸ்தாபநங்களையும் ஆயிரக்கணக்காக வ்ருத்திசெய்வதுடன், ஆங்கு வைஷ்ணவ அறிவு ஒழுக்கம் இவைகளைப் பெருக்கவல்ல கல்வி புகட்டப்பட வேண்டும்.

நம் பெரும்பூதூர் வள்ளல், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைத் தாம் மாத்ரம் வாசித்துக் கடைப்பிடித்தொழுகிப் பிறர் பற்றிய கவலை யில்லாம லிருந்திருந்தால், நாம் ஸ்ரீ வைஷ்ணவராய் இப்பொழுது வாழவேண்டி வந்திருக்குமா? உலகமே வியக்கத் தக்க ஒரு ப்ரசார இயக்கத்தை ஆரம்பித்து, 'நாடும் நகரும் நாராயண' என்று சொல்லுமாறு, நம் அருள் மயமாகிய ஆநந்த ஸித்தாந்தத்தைக் குமரி முதல் இமயம் வரையில் பரப்பினார். அவர் செய்தது என்ன? நம் பரத கண்டத்தில் ஓரிடம் விடாமல் தம் திருவடியைச் சாத்திப் புனிதமாக்கி 'வம்மின் வம்மின்' என்று தம் அருள் மதத்தை – ஆழ்வார்களின் அமுதப் பொழிவை–அச்சுதனின் கருணை ப்ரபாவத்தைச் சொல்லிப் பல்லாயிரம் ஜநங்களை ஸ்ரீ காந்தனின் தாஸர்க ளாக்கினார். மாயா வாதிகள் சூந்ய வாதிகள் க்ஷண வாதிகள் முதலிய கடிந தார்க்கிகர்களுடைய மனத்தையும் கரைத்து நம் மதத்தில் மனமுருகிச் சேரச் செய்தார். இலக்கிய வாயிலாகவும், அவர்களுடைய அபஸித்தாந்தங்களை யெல்லாம் நன்கு கற்றுப் பிறகு அவைகளைக் கண்டித்து, அவைகளுடைய உபயோகமற்ற தன்மையை உலகறியச் செய்யப் பல நூல்களை அருளிச் செய்தார்.

நம் காலத்திலோ, கலி மாஹாத்ம்யத்தால் ஸித்தாந்த நூல்களை வாசித்தவரே அருமை. அதிலும், ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களைக் கையாண்டு வாதிப்பவர்கள் வெகு அருமை. ஆனால் ஜ்ஞாதாக்களாய் வெளிவரும் ஒரு சிலரும் ப்ரசார மனப்பான்மை யில்லா

தவர்களாய் விட்டார்கள். வித்வத் ஸதஸ்ஸுகளிலும் இவர்கள் மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுக் கண்டிப்ப தெல்லாம், பௌத்தமும் ஜைநமும் இன்னும் கண்ணிற் படாத எல்லையற்ற மதங்களையே. பௌத்தமும் ஜைநமும் இப்பொழுது நம்மைப் பற்றிய மட்டிலும் இறந்த மதங்களே. திரும்பித் திரும்பி இவைகளை ஆராய்ச்சி செய்வதிற் பயன் என்ன? ஸ்ரீ பாஷ்யகாரர் தம் காலத்தில் ப்ரபலமான மதங்களை ஆராய்ந்து கண்டித்தார். அவ்வள்ளலின் அடியொற்றி, நம் காலத்துப் பெரியோர்கள் என்ன செய்யவேண்டும்? நம்மைச் சுற்றிப் பெரு வாழ்வு வாழும் கிறிஸ்தவ மதம் மகம்மதிய மதம் இவைகளைப் படிக்க வேண்டும். அடியேன் இப்படிச் சொல்லும்பொழுதே நம் பெரியோர்கள் ஜுகுப்ஸைப் படுவார்கள். ஆயினும் நம் ராமாநுஜன் செய்ததென்ன? சில அபஸித்தாந்தங்கள் உலகில் அறவே மறைந்த போதிலும், பூர்வபக்ஷம் என்கிற முறையில் சில வாக்யங்களை வெகு அழகாக நம் ஸ்ரீ பாஷ்யத்தில் அமைத்திருக்கிறார். அந்ய மதங்களை எவ்வளவு அழகாக நம் ராமாநுஜன் அறிந்திருந்தார் பாருங்கள். கிறிஸ்தவ மதத்தையும் மகம்மதிய மதத்தையும் வெகு இழிவாக நம் பெரியோர்கள் நினைத்து வருகிறார் என்பது அடியேனுக்குத் தெரியும். ஆயினும் அவைகளால் நம் ஸம்ப்ரதாயத்திற்கு எத்துணை மூலதோ ஹாநி நேரக் கூடும் என்பதை நினைத்துப் பார்த்தால், அவர்கள் இப்படி வாளா இருக்க முடியாது. வீட்டில் நெருப்புப் பொறி கனியுங்கால் அதை அலக்ஷ்யம் செய்யலாகாது. அறிவாளிகளாய் ஸித்தாந்த ப்ரவசநம் செய்ய வல்லமையுள்ள மஹான்கள் இந்த இரு மதங்களை ஸாங்கோபாங்கமாய் வாசித்து, அவற்றிலுள்ள இழுக்குகளை உலகறியச் செய்து, நம் மதத்தின் மேன்மையை ஸ்தாபிக்கவேண்டும். இதனால் வெளியிலிருந்து பலர் நம் மதத்தைக் கடைப்பிடித்தாலும் ஸரி — இல்லாவிட்டாலும் ஸரி — ஸ்ரீ வைஷ்ணவ இளைஞர்கள் அந்ய மத விலங்குகளிலிருந்து விடுபடுவார்கள். கிறிஸ்துவ மதமும் மகம்மதிய மதமும் நமக்கு எத்துணை ஆபத்தாய் நிற்கின்றன என்பது நம் பெரியோர்க்குத் தெரியாது. என்போன்ற லௌகிகர்களே அறிவார்கள். **இந்தப் பேராபத்தை அடுத்த ஸஞ்சிகையில் தனியாய் விஜ்ஞாபநம் செய்து கொள்கிறேன்.** ஆக, நம் மடாதிபதிகளும் தநவந்தர்களும் ஒன்று கூடி நம் ஸித்தாந்தத்தைக் காப்பாற்றுவதற்கு, அந்ய மதகண்டநபூர்வமான நம் தர்சந அறிவை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உண்டுபண்ண வேண்டும். இதற்கு எல்லையற்ற அறிவாளிகளும் ப்ரசாரகர்களும் வேண்டும். இந்த சக்தி ஸ்ரிய:பதியின் க்ருபையால் நம்மிடை இல்லாமல் இல்லை. 'தர்மரக்ஷகன் ஸ்ரீ வாஸுதேவன்; நாம் தானா காப்பாற்றப் போகிறோம்' என்று பல பெரியோர்கள் நினைக்கலாம். ஆனால் வெகு சீக்ரத்தில் நம் ஸித்தாந்தத்தை உயிரற்றதாகச் செய்யக்கூடிய சக்தி விசேஷங்கள் நம் நாட்டில் நம்மைச் சுற்றி நிலவி வருகின்றன. இதை நினைக்க நினைக்க மனம் குமுறுகிறது. வித்வத் ஸதஸ்ஸுகளில் ஜைநனுடைய ஸப்தபங்கியையும் மாத்யமிகனுடைய சூந்ய வாதத்தையும், நாகார்ஜுநனுடைய நாஸ்திகத்தையும் கண்டித்து என்ன பயன்? ஸ்ரீ வைஷ்ணவ மஹாங்களாய், ஜ்ஞாதாக்களாய், ப்ரவக்தாக்களாய் வாழும் ஆசார்யமணிகளை அடி பணிந்து வேண்டிக் கொள்கிறேன். "மஹநீயர்களே! அந்ய ஸித்தாந்தங்களை நன்கு கற்று, அவைகளை நன்கு விளக்கி, அவற்றிலுள்ள குறைபாடுகளை உணர்த்தி ஸ்ரீ கோவிந்தனுக்குக் குற்றேவல் செய்யுங்கள். இத்திவ்ய திருப்பணிகளில் லௌகிகர்களாய் ஆங்கில அறிவும், ஸித்தாந்தத்தில் பேரன்பும் கொண்ட அடியோங்கள் எங்கள் உடல் பொருள் ஆவியைக் கொடுத்து ஜந்ம ஸாபல்யம் பெறுகிறோம். அதுவரையில் மெய் வருத்தம் பாரோம்; பசி நோக்கோம்; கண் துஞ்சோம்; நம்மில் ஒற்றுமையும், வைஷ்ணவ ஸ்ரீயும் ஓங்கி நாம் யாவரும் ஒன்று சேர்ந்து,

"परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय" என்றும்

"अन्योन्यवैरजननी विजहात्वसूया" என்றும்

ஸ்ரீ தேவாதி தேவனை வேண்டித் தேச மறிய அவன் தொண்டராய்த் திரிவோமாக!

மதிப்புரை

வேதாந்தாசார்யன்:—பல பெரிய நூல்களை இயற்றி ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்குப் பேருதவி செய்தவரான ஸ்ரீ வேதாந்த தேசிகன் பல பெயர்களால் பலவாறு பாராட்டப்பட்டிருக்கிறார் என்பது எல்லாருக்கும் விதிதமே. எவரெவரால் எவ்வெவ்வாறு அவர் பாராட்டப்பட்டிருக்கிறாரோ அவற்றையெல்லாம் தொகுத்தெழுதி ஒரு புஸ்தக ரூபமாக ஸ்ரீ. உப. பந்தல்குடி திருமலை ஐயங்கார் ஸ்வாமி அச்சிட்டு, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் 16-வது வெளியீடாக ப்ரசுரம் செய்திருக்கிறார். ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய பக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்க ளெல்லாருக்கும் இது ஒரு பேருதவியே. ஐயங்காரவர்களின் நன்முயற்சி போற்றத் தக்கது. இப்புத்தகம் அபேக்ஷிப்பவர்:— ஸ்ரீ. ப. ரெ. திருமலை ஐயங்கார்: 15, கணபதி முதலி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ் என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பெரியாழ்வார் ராமாயணம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

அநேகமாய் ஆழ்வார்கள் அனைவரும் நாயகீபாவம் அடைந்து எம்பெருமான் கல்யாண குணங்களை மனமுருகிப் பாடி அவனை அடைந்து அநுபவித்துக் களித்தனர். பெரியாழ்வாரோ என்றால், கண்ணனது திவ்ய லீலைகளில் ஈடுபட்டு, தம்மையே தாயாகிய யசோதையாய்ப் பாவித்து, திவ்யக் குழந்தையை எடுத்து மடிமேல் வைத்துப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி இணையில்லா இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து அநுபவித்தார்.

திடீரென்று அவருக்கு க்ருஷ்ணாவதாரம் ராமாவதாரம் இரண்டையும் ஏக காலத்தில் அநுபவிக்கவேணு மென்று இச்சை யுண்டாயிற்று. தத்க்ஷணம் தம்மைத் தோழிமார் இருவராய்ப் பாவித்து, பரமபுருஷனின் ஸௌலப்யம் பரத்வம் என்னும் இரண்டு கல்யாண குணங்களை ஒருவருக் கொருவர் எடுத்து விவரித்தும் பறந்தும் குதித்தும் பாடிக் களித்தார். அவ்வநுபவ ஸமயத்தில் ஸ்ரீ ராமாவதார திவ்ய சரிதங்கள் விஷ்ணுசித்தர் சிந்தையில் ஒன்றன்பின் ஒன்றாய்க் காட்சி யளித்தன. ஸ்ரீமத் ராமாயணத்தில் மிகவும் உத்தமமான பாகம் ஸுந்தரகாண்டம். ஸீதா சரிதமாகிற நவரத்ந மாலையில் நடுநாயகமாய் விளங்குமவர் சிறிய திருவடி. அம்மஹான், ஸர்வேஶ்வரனும் ஸர்வ ஶக்தனுமாகிய பகவானுக்குப் பெருநல்லுதவி செய்து க்ருதார்த்தரானார். ஸர்வலோக மாதாவுக்கும் ப்ராண ப்ரதாநம் செய்து, “நீர் செய்த பெருநல்லுதவிக்குக் கைம்மாறு உபய விபூதிகளிலும் காண்கிலேன்” என்று திவ்ய தம்பதிகளால் ஶ்லாகிக்கப்பட்டார். தேவிக்கு மாத்ரமே உரியதாகிய திவ்யமங்கள விக்ரஹத்தால் ஆலிங்கநமும் செய்துகொள்ளப் பட்டார். அம்மஹான் பாக்கியமே பாக்யம்! என்றெண்ணினார். மேலும், கடல் சூழ்ந்த இலங்கைக்குள் கர்வம் தலையெடுத்த தஶகண்ட ராவணனால் பிராட்டி சிறை வைக்கப்பட்டு மிகவும் தீனையாய் வருந்தும் தருணத்தில் மஹானுபாவனாகிய ஹநுமான் தோன்றி, சக்ரவர்த்தித் திருமகனது கல்யாண குணங்களைக் காநம் செய்து, ‘பகவான் அவஶ்யம் காப்பாற்றுவார்’ என்னும் தைர்யத்தை உண்டுபண்ணியதும், அன்னையின் துக்க நிலைமையைப் பெருமாள் ஸந்நிதியில் விண்ணப்பம் செய்து இருவரையும் சேர்த்துப் பரமாநந்தம் அநுபவிக்குமாறு செய்ததுமாகிய இச்சரிதமானது, “அநாதி காலமாக ஸம்ஸார ஸாகரத்தினால் சூழப்பட்ட தேஹத்தினுள், பத்து இந்த்ரியங்களுடன் கூடிய மனத்தினால் சிறை வைக்கப்பட்டுக் கடைத்தேற வழியின்றி வருந்தும் ஜீவாத்மாவை, பரம காருணிகனாகிய எம்பெருமானால் அனுப்பப்பட்ட ஸதாசார்யன் அலுப்புச் சலிப்பில்லாமல் தம்மிடம் நம்பிக்கை வருமாறு செய்தும், பரம ரஹஸ்யங்களை உபதேசித்தும், பகவத் பத கமலங்களில் கரையற்ற நித்ய கைங்கர்யங்களைச் செய்து பரமாநந்தத்தை அடையுமாறும் செய்கிறார்” என்பதை விளக்கிக் காட்டுகிறது.

அத்தருணம் அன்னை ஜாநகி அசோக வநத்தில் சிறையிருந்து வருந்திய காட்சி ஹநுமான் மனக்கண்களின் முன்பு பளிச்சென ப்ரகாசித்தது. ‘ஆஹா! தாயின் ஸஹஜ காருண்யந்தான் என்ன! அடைக்கல மடைந்த தேவர்களையும் முனிவர்களையும் காக்கும் பொருட்டுத் தான் கடுங்காவலில் இருக்கிறாளே! இப்பொழுதே ஓடிப்போய் அவளைத் தேற்றலாமே’ என்று எண்ணினார். உடனே தான் மாருதியாக மாறினார். ஆழ் கடலைத் தாண்டினார். இலங்கை மாநகர் முழுதும் தேடினார். தேவியைக் காணாமல் துக்கக் கடலில் ஆழ்ந்தார். தம் ப்ரயத்நத்தினால் மாத்ரம் ஒரு கார்யமும் நிறைவேறாது; பகவத் ஸங்கல்பம் அவஶ்யம் வேண்டும் என்று

“नमोस्तु रामाय सलक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोस्तु रुद्रेन्द्रयमानिलेभ्यो नमोस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ॥”

என்று பகவான் பாகவதன் தேவி இதர தேவதைகள் அனைவருக்கும் சரணாகதி செய்தார். அப்பொழுது பகவத் க்ருபையால் அசோக வநம் தென்பட்டது. ஒரே தாவில் அவ்விடம் வந்து சேர்ந்தார். கறுத்த மேகங்களுக்கு நடுவில் தோன்றும் பூர்ண சந்த்ரனைப் போல், கோர ராக்ஷஸிகளின் நடுவில் விளங்கும் ஸீதாதேவியைக் கண்டார். பரமாநந்தம் கொண்டார். சிரமேற் கைகுவித்து ராம த்யாநம் செய்தார். கொடிய அரக்கன் பரிவாரங்கள் புடைசூழ வந்தான். தாயைப் பார்த்துக் கடும் சொல்லம்புகளைப் பொழிந்தான். க்ரூர ராக்ஷஸிகள் பலவாறு துன்புறுத்தினர். அப்பொழுது ஜ்ஞாநத்திலும் வயதிலும் முதிர்ந்த திரிஜடை அவர்களைக் கண்டித்து, தான் கண்ட திவ்யக் கனவைக் கூறினாள். ‘அவஶ்யம் தேவியைச் சரணாகதி செய்யுங்கள்’ என்று கட்டளையிட்டாள். பிராட்டியும், அவ்விதம் தனக்கு நல்ல காலம் வந்தால் அவஶ்யம் காப்பாற்றுவதாக வாக்களித்தாள். மரத்தின்மேல் இருந்த மாருதி இவைகள் அனைத்தையும் கவனித்தார். முடிவில் தாய் துக்கந்

தாங்காமல் ப்ராண த்யாகம் செய்ய எண்ணியதையும் அறிந்தார். 'இனித் தாமதிக்க லாகாது. வெள்ளம் கடந்த பிறகு அணை கட்டுவதில் பயனென்ன?' என்றெண்ணி, "राजा दशरथो नाम रथकुंजरवाजिमान्" என்று தொடங்கிச் சுருக்கமாய் ராமாயணத் தைப் பாடினார். பிராட்டி சுற்று முற்றும் நோக்கினாள். மரத்தின்மேல் தேஜஃபுஞ்ஜ மாய் விளங்கும் திருவடியைக் கண்டாள். சிறிது விச்வாஸம் கொண்டாள். அதை யறிந்த அவர் கீழே இறங்கித் தேவியின் ஸமீபம் வந்தார். ஆனால் அன்னை, ராவணன் மாறு வே ஷத்தோடு வந்திருக்கிறானோ என்று பயந்து நடுங்கினாள். அதை யறிந்த புத்திமானாகிய ஆஞ்ஜநேயன் தான் ஸ்ரீராமதூதன் என்று அவள் நம்பும்வண்ணம் பெருமாள் சொல்லி யனுப்பிய ரஹஸ்ய வ்ருத்தாந்தங்களை அடையாளங்களாக மொழிந்து ஸ்ரீராகவன் திருக் கை மோதிர மளித்து ஆநந்திக்கிறார்.

"इमामसितकेशान्तां शतपत्रनिभेक्षणाम् ।
सुखार्हां दुःखितां दृष्ट्वा ममापि व्यथितं मनः ॥"

'சுருண்டு கறுத்து அழகிய கூந்தல் நுனியை உடையவள். செந்தாமரை போன்ற திருக் கண்களை உடையவள். ஸர்வ காலமும் ஸுகமே அநுபவிக்கத் தக்கவள். அத் தகைய இத்தேவி மிகவும் வருந்துவதைப் பார்த்து, வாநர ஜாதியில் ஜநித்த எனக்குக்கூட மனம் வருந்துகிறதே! இவ்வளவு தீந தசையிலும் தாயின் திருக்குழலின் அடர்த்தியும் கரு மையும் மாறவில்லையே! உபவாஸத்தாலும், கவலையாலும் பயத்தாலும் மிகவும் இளைத் திருக்கிறாள். ஸதா பர்த்தாவையே த்யாநித்துக்கொண்டு பதிவ்ரதா தர்மத்தைக் கைவிடா மல் ஒரே பிடியாய் இருப்பதுதான் என்ன ஆச்சர்யம்!' என்றெண்ணிப் பின் வருமாறு அடையாள மொழிகளைக் கூறுகிறார்.

1. நெறிந்தகருங் குழல்மடவாய் நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்து நினைக்கொணர்ந்த
தறிந்தரசு களைகட்ட வருந்தவத்தோ னிடைவிலங்க
செறிந்தசிலை கொடுதவத்தைச் சிதைத்ததுமோ ரடையாளம்.

ஹநுமான் இப் பாசுரத்தில் நெறிந்த கருங்குழல் மடவாய்! என்று அன்பு ததும்ப அழைக்கின்றார். தேவி கருணை பொழியும் கமலக் கண்களால் கடாக்ஷித்தாள். "திவ்ய தம்பதிகளாகிய உங்களிருவருக்கும் நான் தாஸன்; க்ருபை கூர்ந்து அடியேன் விண்ணப் பம் ஒன்றைக் கேட்டருளவேண்டும்" என்றார். அவ்வார்த்தைகளைச் செவியுற்ற தேவி "என்ன அழகாகவும் நிதானமாகவும் பேசுகிறான். முகத்தைப் பார்த்தால் சாந்தனாகவும், களங்க மற்றவனாகவும் காணப்படுகிறான். இவனை நம்பலாம்" என்று எண்ணிப் பரிவுடன் அவரை நோக்கி "ஹநுமந்! என் மனம் அலைகடல் துரும்பு போல் அலைந்து தவிக்கிறது. பார்த்ததெல்லாம் ஸந்தேஹமாகவே தோன்றுகிறது. நீர் ஸ்ரீ ராகவன் அனுப்பிய தூதன் தான் என்று நான் எவ்விதம் நம்புவது? என் நம்பிக்கைக்கு உரிய ரஹஸ்ய அடையாளங் கள் ஏதேனும் ஸ்வாமி சொல்லியிருந்தால் அதைக் கூறுவீர்" என்றாள். "தாயே! அடி யேன் அதையே இப்பொழுது விண்ணப்பம் செய்கிறேன். என்னிடம் பரிபூர்ண நம்பிக்கை உண்டாகும் வண்ணம் பெருமாள் சொல்லியனுப்பிய அடையாளங்களைக் கேட்க வேண்டு கிறேன். சில வருஷங்களுக்குமுன் உம் தந்தை ஜநக சக்ரவர்த்தி ஒரு யாகம் செய்தார். அத்திவ்ய ஸபையில் அவர் நவரத்நங்க ளிழைத்த உத்தம கிரீடந் தரித்து வீற்றிருந்தார். அவர் தம்மிடமிருந்த சிவ தநுஸ்ஸை யார் வளைத்து நாணேற்றுகிறார்களோ அவர்களுக்குத் தான் தம் திருமகளைத் திருமணம் செய்து கொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்துவிட்டார். உலகத்தில் ஒருவராலும் அந்த தநுஸ்ஸை அசைக்கக்கூட ஸாத்யமாக வில்லை. அத்தரு ணம் விச்வாமித்ர முனிவருடன் ராமலக்ஷ்மணர்கள் இருவரும் அந்த ஸபையை அலங்க ரித்திருந்தனர். உம் தந்தை சக்ரவர்த்தித் திருமகனைப் பார்த்து, 'கட்டழகும் கம்பீரமும் பராக்ரமமும் சேர்ந்து உருவ மெடுத்த பாலகனுக்கு என் ஸீதையைக் கொடுக்கலாம். சின் னஞ் சிறு பாலகன் அப்பெரும் வில்லை அசைக்கவும் வல்லனோ?' என்று எண்ணி ஏங்கித் தவித்தார். அதை ஞானக் கண்ணால் அறிந்த கௌசிக முனிவர் வில்லை ஸபைக்குக் கொண்டுவரக் கட்டளையிட்டார். தநுஸ்ஸின் பெருமையை எடுத்து விவரித்தார் ஜநக மஹாராஜர். பெருமாள் கந்யா சுல்கமாகிய அத்தநுஸ்ஸை எடுத்து வளைத்தார். ஸர்வ சக்தனது பலம் தாங்காமல் அவ்வில் நடுவில் முறிந்தது. அப்பொழுதே தேவரீரது தந்தை யின் ஹ்ருதயத்தில் தைத்திருந்த முள்ளும் எடுபட்டது. அவர் மட்டில்லாமல் மகிழ்ச்சி யுடன் உம்மை "இந்த ஸீதை கர்ப்பவாஸ மின்றி அவதரித்தவள். தேவரீர் சரணாகத ரக்ஷணம் செய்யத் தீக்ஷை வகித்துப் பத்த கங்கணரானால், இப்பத்நி அநுகூலமுடையவ ளாய்த் தேவரீர்க்கு முன் நடந்து, தான் சிறையிருந்தாயினும் ஆச்ரிதர்களை ரக்ஷிப்பாள். ஆகையால் இவளைக் கைப்பிடியும். தேவரீர் அவதரித்த காரியம் கைகூடும். தேவரீ ருடைய ஸொத்தை மறுபடி தேவரீரிடமே ஒப்புவித்தேன்" என்று கூறிப் பாணிக்ரஹ ணம் செய்து கொடுத்தார்.

இதைக் கேட்ட தேவியின் முகத்தில் மந்தஹாஸம் தவழ்ந்தது. திருவடியைப் பரிவுடன் நோக்கி "அப்பா! ஹநுமன்! இவ்வ்ருத்தாந்தம் மூவுலகும் அறிந்த பரம ரஹஸ்யமாயிற்றே. இவ்வடையாளத்தைக் கொண்டு உன்னை ராமதூதன் என்று நம்புவது, இராவணனை ஸந்யாஸி என்றெண்ணி மோசம் போனதுபோலாகுமே என அஞ்சுகிறேன்" என்றாள். அதற்கு ஹநுமான், "தாயே! கொஞ்சம் ஸமாதான சித்தத்துடன் கேட்க வேண்டுகிறேன். இதிலும் ரஹஸ்யம் உள்ளடங்கியுள்ளதே. நீர் சரணகத ரக்ஷணத்தின் பொருட்டுச் சிறை யிருப்பதை இவ்வுலக மறியுமோ?" என்றான். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

ஸ்ரீ அழகியசிங்கரின் மைஸூர் தேச யாத்ரை

[இது, ஸ்ரீ அழகியசிங்கரின் நியமநத்தால் மீண்டும் ப்ரசுரப்படுத்தப்படுகிறது]

ஸ்ரீ அழகியசிங்கர் கங்கேரியிலிருந்து பெங்களூர் எழுந்தருளும்போது, இவ்வூர் ப்ரபல அதிகாரிகளும் ஆஸ்திகாக்ரேஸரர்களும் வழக்கப்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் பூர்ண கும்பத்தோடும் வாத்ய கோஷத்தோடும் எதிர்கொண்டழைத்துத் துளஸித் தோட்டத்தில் எழுந்தருளப் பண்ணினர்கள் என்பது வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம்.

ஸ்ரீநிவாஸ வேதாந்த யதீந்த்ர மஹா தேசிகனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ ப்ரஸந்ந க்ருஷ்ணப் பெருமாளுடைய சதாபிஷேக மஹோத்ஸவத்தை நடத்தித் தரவேணுமென்று ஸ்ரீமான் பக்தஶிரோமணி கருடாசார்ய ஸ்வாமியால் ப்ரார்த்திக்கப்பட்டு, ஷை உத்ஸவம் யதாக்ரமம் ஸ்ரீ அழகியசிங்கரால் அதிவிமரிசையாக நடத்தப்பட்டது. பின்பு அநேக நாட்கள் ஸ்ரீமான் கருடாசார்ய ஸ்வாமியால் பரிபூர்ணமாக ஆராதிக்கப்பட்டு, திருமஞ்சனம் டோலோத்ஸவம் முதலியன செய்துவைக்கப்பட்டன. "தேவு மற்றறியேன்" என்று அருளிச்செய்த மதுரகவிகள் போல், தமக்குப் பரந்யாஸம் பண்ணின பரமாசார்யனை ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் இந்த ஸ்வாமிக்கு இருக்கும் பக்தி ப்ரவாஹமானது ஆஶ்சர்யப்படத் தக்கது.

"க்ஷுதா த்ருஷ்ணாபிதேவ சாதக:" என்பதுபோல் அநேக வருஷங்களாகச் சாதக பக்ஷிபோல் காத்துக்கொண்டிருக்கும் பெங்களூர் வாஸிகளான ஆஸ்திகாக்ரேஸரர்கள் அளவற்ற உத்ஸாஹத்துடனும் பக்திஶ்ரத்தையுடனும் அஹமஹமிகயா ப்ரதிதிநம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனைப் பரிபூர்ணமாக ஆராதித்துப் பெரிய பெருமாளுக்கு திருமஞ்சனமும் கண்ணனுக்கு டோலோத்ஸவமும் செய்துவைத்து நிரவதிகாநந்த பரிதர்களானார்கள். ஒவ்வொருவரும் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் "தொண்டீரெல்லீரும் வாரீர்" என்கிறபடி எல்லோரையும் சேர்த்துக்கொண்டு பெருமாளை ஸேவித்து ஸ்ரீ அழகியசிங்கருடைய பலமந்த்ராக்ஷதையைப் பெற்றுக்கொண்டு, "நிவ்ருத்த சேதா: க்ருதார்த்த ஹ்ருதயோ மஹாத்மா: | ப்ரதிஷ்டா ஸ்வாமினா மூர்த்தி ப்ரதிஷ்டாப்யா மதம்" என்கிறபடி பரமாநந்தத்தை அடைந்து த்ருப்தரானார்கள். இதைக் கண்ட மஹான்களும் 'அஹோ பாக்யம் அஹோ பாக்யம் நமோ ப்ரஜாஸுகம் | யதீந்த்ரம் பரமானந்தம் பூர்ணம் ப்ரஹ்ம ஸநாதநம் |' என்கிறபடி இவர்களுடைய ஸுக்ருத பரிபாகத்தையும் பெரும் பாக்யத்தையும் வாயாரப் புகழ்ந்தார்கள்.

இவ்வூர் ஸ்திரீ புருஷர்களுடைய அளவற்ற பக்தியையும் பெருமாளை ஆராதிப்பதில் உள்ள உத்ஸாஹத்தையும் விநயம் முதலியவைகளையும் கண்டு, ஸ்ரீ அழகியசிங்கர் இன்னும் சில காலம் இங்கே இருக்கலாமென்று திருவுள்ளம் பற்றும்படியாயிருந்தது. மைஸூர் ஸம்ஸ்தானத்தில் ஸஞ்சாரமாக எழுந்தருளும்போது ஆங்காங்கு ஸ்ரீரங்கப்பட்டணம் திருநாராயணபுரம் தொண்டனூர் முதலிய இடங்களில் அதிகாரிகளால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளமுகக்கும்படியாய் இருந்தது.

ஸ்ரீ B. K. கருடாசார் முதலானவர்கள் நாளை தைமீ 29உ நடக்கும் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் நடக்கும் மாலோல வித்வத் ஸபையை இங்கே நடத்தவேணுமென்றும் ப்ரார்த்திக்கிறார்கள்.

பக்தசிரோமணி ஸ்ரீமான் B. K. கருடாசார் ஸ்வாமி முதலான ப்ரமுகர்களின் ப்ரார்த்தனைக் கிணங்கி ஸ்ரீமத் அழகியசிங்கரால் ஸகலமானவர்களுக்கும் மனதில் பதியும்படி, 1. ஆசார்ய பக்தி, 2. ப்ராஹ்மண ஸம்ஸ்காரம். 3. ராமாயணஸாரம்,

4. திருப்பாவை முதலியவைகளை, எல்லோரும் கேட்கும்படி ஒலிபரப்புக் கருவிகளுடன் உபந்யஸித்த க்ரமத்தைக் கேட்டு, "[illegible] | [illegible]" என்கிறபடி ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டும் ஆநந்தித்தார்கள். இதைத் தவிர ராவ் கமிட்டி ஹிந்து சட்டத்திருத்த மசோதாவைப்பற்றி அநேக ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களைக் கொண்டு சாஸ்த்ர முறைகளுக்கும் லௌகிகத்துக்கும் விரோத மென்பதை எடுத்துக் காட்டின பிறகு, ராவ்பஹதூர் B. K. கருடாசார்ய ஸ்வாமியால் திருத்த மசோதா கண்டிக்கப்பட்டு ரிடயர்ட் ஜட்ஜ் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11-2-44. —ஜோ. ரங்காசார்யர், ஸ்ரீ கார்யம், ஸ்ரீ அஹோபில மடம்.

---

(2)

ஸ்ரீ கல்யாணப்ரவர்த்தநீ ஸபை, மதுராந்தகம்.

ஷை ஸபையின் மூன்றுவது வார்ஷிக மஹோத்ஸவம் 11—3—45 பகல் 1-மணிக்கு ஷை கலாசாலையில் ஸ்ரீமான் தேசிகதுரந்தரர் ஸ்ரீ உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் (அட்வகேட். மதராஸ்) ஸ்வாமி தலைமையில் கூடியது. அச்சமயம் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் 'ஸ்ரீ தேசிகனும் தமிழும்' என்பதைப் பற்றியும், 'கம்பனின் வைஷ்ணவம்' என்பதைப் பற்றியும் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. அப்பொழுது அநேக ஸ்வாமிகள் எழுந்தருளி யிருந்தனர். கடைசியில் ஷை காலேஜ் ப்ரின்ஸிபால் ஸி. ராகவாசாரிய ஸ்வாமியால் வந்தநோபசாரம் கூறப்பட்டு ஸபை முடிந்தது. —K. ராமாநுஜாசார்யர், கார்யதர்சி

---

(3)

40-வது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின்

22-வது வார்ஷிக மஹாராராதநம் : பன்ருட்டி.

இந்த உத்ஸவம் பன்ருட்டியில் 8—2—45 முதல் 10—2—45 பர்யந்தம் மிக்கச் சிறப்புடன் நடைபெற்றது என்றும், அப்பொழுது அவ்விடத்தில் அநேக வைதிக வித்வாங்களும் அநேக லௌகிக ப்ரபுக்களும் வந்திருந்தார்கள் என்றும், பிரதிதினம் சிறந்த உபந்யாஸங்கள் நடந்தனவென்றும் ததீயாராதநமும் குறைவின்றிக்கே செய்யப்பட்டதென்றும் இவ்வாறு அந்தக் கொண்டாட்டத்தை பற்றி ஸ்ரீ உப.கா. பார்த்தசாரதி ஐயங்காரிடமிருந்து ஒரு அறிக்கை வரப்பெற்றோம். ஆனால் அந்த அறிக்கையை உள்ளபடி ஸ்ரீ ப்ரியையில் ப்ரசுரம் செய்ய அவகாசம் இராததால், அது ப்ரசுரிக்கப்படாமல் நின்றுவிட்டது. ப்ரசுரம் செய்யாமல் இருப்பது தவறுதலாகு மென்று பயந்து, விளம்பித்து ப்ரசுரமானாலும் ப்ரத்யவாயம் நேரமாட்டாது என்னும் நம்பிக்கையுடன் அதை ஸங்க்ரஹித்து ப்ரசுரிக்கிறோம். கத்யந்தராபாவத்தால் நேர்ந்த அபராதத்தை ஸ்ரீ பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி க்ருபையுடன் க்ஷமித்தருளவேணு மென்று ப்ரார்த்திக்கிறோம். —ஸம்பாதகர்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவஹூ சித்திரைமீ

1௳	வெள்ளிக்கிழமை	—	தமிழ் வருஷப்பிறப்பு. மேஷரவி 9-6 சூந்ய திதி
2௳	சனிக்கிழமை	—	த்ருதீயை திதி
3௳	ஞாயிற்றுக்கிழமை	—	சதுர்த்தி திதி
6௳	புதன்கிழமை	–	ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்
8௳	வெள்ளிக்கிழமை	—	ஸ்ரீராமநவமீ
11௳	திங்கட்கிழமை	—	த்வாதசி திதி - ஏகாதசீ வ்ரதம்
13௳	புதன்கிழமை	–	சதுர்த்தசி திதி
14௳	வியாழக்கிழமை	—	அதிதி
15௳	வெள்ளிக்கிழமை	–	பௌர்ணமாஸீ : சித்ராபூர்ணிமா
25௳	திங்கட்கிழமை	—	தசமி ஏகாதசீ திதி த்வயம்
26௳	செவ்வாய்க்கிழமை	—	ஏகாதஶீ வ்ரதம் த்வாதசீ திதி
29௳	வெள்ளிக்கிழமை	–	அமாவாஸ்யை
30௳	சனிக்கிழமை	—	சுக்ல ப்ரதமை திதி
31௳	ஞாயிற்றுக்கிழமை	—	சுக்ல த்விதீயை திதி

[வைகாசிமீ 1உ திங்கட்கிழமை வ்ருஷப ஸங்க்ரமணம் : சூந்ய திதி]

तस्मै स होवाच "आकाशो ह वा एष देवो वायुरग्निरापः पृथिवी वाङ्मन-श्चक्षुः श्रोत्रञ्च । ते प्रकाश्याभिवदन्ति 'वयमेतद्बाणमवष्टभ्य विधारयामः' ॥२॥

---

2. அந்த ஆக்யாயிகையாவது: ஒரு ஸமயத்தில், இந்தத் தேஹத்திற்கு ஆரம்பகங்களாயிருக்கும் ஆகாஶம் முதலிய ஐந்து மஹா பூதங்களும் அந்தத் தேஹத்தை ஆஶ்ரயித்து நிற்கும் இந்த்ரியங்களும் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து, தாம் இருக்கும் ஶரீரத்தை நோக்கி, 'இந்த ஶரீரத்தை நாம் அன்றோ தரிக்கின்றோம்?' என்று சொல்லின. இதைக் கேட்டிருந்த முக்ய ப்ராணனானது, இவைகளின் கர்வத்தை அடக்க வேணுமென் றெண்ணி, இந்தத் தேஹத்திலிருந்து கொஞ்சம் தான் வெளிக்கிளம்பயத்நித்தது. அப்படி ப்ராணன் வெளிக்கிளம்ப ஆரம்பித்தவுடன் இந்த்ரியங்கள் முதலியவை தாம் தேஹத்தில் தங்கி நிற்கமாட்டாமல் இருந்ததைப் பார்த்து, முக்யப்ராணனுடைய மாஹாத்ம்யத்தை உணர்ந்து, அதை ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தன. இது தான் ஆக்யாயிகை. இதன் கருத்து என்னவென்றால்: "லோகத்தில் ஸாமாந்ய ஜநங்கள் தேஹமே ஆத்மா வென்றும், இந்த்ரியங்களே ஆத்மா வென்றும், இம்மாதிரி ஆத்ம வஸ்துவைப் பற்றி ப்ரமித்திருக்கிறார்கள். இவைகளைக் காட்டிலும் அதிக ஸாமர்த்யமுடைய 'முக்ய ப்ராணன்' என்று ஒன்று உண்டு" என்பதைக் காண்பிக்கவேண்டுமென்பது தான். உண்மையில் அந்த முக்ய ப்ராணனும் தேஹத்தைத் தரிக்கவில்லை; அதைக் காட்டிலும் பரமாயும் சேதநனாயும் இருக்கும் மற்றொரு வஸ்து ஒன்று உண்டு; அது தான் ஆத்மா; அது தான் பரமாத்மாவினால் கொடுக்கப்பட்ட ஶக்தியைக் கொண்டு தேஹம் முதலியவைகளைத் தரிக்கின்றது. இதை விளக்கும் பொருட்டே, முதலில் முக்ய ப்ராணன் த்ருஷ்டாந்தமாகக் காண்பிக்கப்படுகின்றது.

[ப-ரை.] **तस्मै** - அவனுக்கு [அந்த வைதர்ப்பிக்கு], **सः** - அவர் [பிப்பலாதர்], **उवाच ह** - சொன்னார். **आकाशः** - ஆகாசம், **देवो वायुः** - எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கும் வாயு, **अग्निः** - தேஜஸ், **आपः** - ஜலம், **पृथिवी** - பூமி, **वाक्** - வாக் [வாக் முதலிய கர்மேந்த்ரியங்கள்], **मनः** - மநஸ், **चक्षुः** - கண், **श्रोत्रम् च** - காது [இவை முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்கள்], **ते** - இவையெல்லாம், **प्रकाश्य** - [ஶரீரத்தைக்] காண்பித்துக் கொண்டு, **अभिवदन्ति** - அதைச் சுற்றி நிற்பவைகளாய்ச் சொன்னதாவது, '**बाणम्** - பாணம்போல ஸஞ்சரிக்கும் ஶீலமுடைய, **एतत्** - இதை [இந்த ஶரீரத்தை], **अवष्टभ्य** - நிலைநிறுத்தி, **विधारयामः** - [நாமே] தரிக்கின்றோம்' **हवा** - [இது ப்ரஸித்தியைக் குறிக்கின்றது].

देवः - இது 'வாயு' என்பதற்கு விஶேஷணம். **दीव्यतीति देवः** [சலிக்கும் ஶீலமுடையதால் 'தேவன்' என்று சொல்லப்படுகின்றது.] அல்லது: கீழே '**कत्येव देवाः**' என்று கேட்குமிடத்திற்போல, இவ்விடத்

तान्वरिष्ठः प्राण उवाच 'मा मोहमापद्यथ । अहमेवैतत् पञ्चधाऽऽत्मानं प्रविभज्यैतद्बाणमवष्टभ्य विधारयामि' इति ॥ ३ ॥

तेऽश्रद्दधाना बभूवुः । सोऽभिमानादूर्ध्वमुत्क्रामत इव । तस्मिन्नुत्क्रामत्यथेतरे सर्व एवोत्क्रामन्ते । तस्मिंश्च प्रतिष्ठमाने सर्व एव प्रतिष्ठन्ते । तद्यथा मक्षिका मधुकरराजानमुत्क्रामन्तं सर्व एवोत्क्रामन्ते, तस्मिंश्च प्रतिष्ठमाने सर्वा एव प्रातिष्ठन्त, एवं वाङ्मनश्चक्षुःश्रोत्रञ्च । ते प्रीताः प्राणँ स्तुवन्ति ॥ ४ ॥

திலுள்ள 'தேவ ஶப்தத்தை ஆகாஶம் முதலிய எல்லாவற்றுக்கும் விஶேஷணமாகவும் எடுத்துக்கொள்ளலாம். 'தேவ' என்னும் ஶப்தம் இந்த்ரியங்களையும் குறிக்கும்.

---

3. [ப-ரை.] **वरिष्ठः** - [மற்றை எல்லாரையும் காட்டிலும்] ஶ்ரேஷ்டமான, **प्राणः** - முக்ய ப்ராணன், **तान्** - அவர்களை [அந்த ஆகாஶம் முதலியவைகளை நோக்கி], **उवाच** - சொல்லிற்று. '[ஹே ஆகாஶாதிகளே], **मोहम्** - மோஹத்தை, **मा आपद्यथ** - அடையாதேயுங்கள். **एतत्** - இதை [இந்தச் சரீரத்தை], **अहमेव** - நானே, **आत्मानम्** - என்னை, **पञ्चधा** - ஐந்து பாகமாக. **प्रविभज्य** - பிரித்துக்கொண்டு, **एतद्बाणमवष्टभ्य विधारयामि** - பாணம் போன்ற இந்த ஶரீரத்தை நிலைநிறுத்தித் தரிக்கின்றேன்,' **इति** - என்று.

पञ्चधा - ப்ராணன் என்பது நமது தேஹத்தில், ப்ராண, அபாந, வ்யாந, உதாந, ஸமாந என்று ஐந்தாகப் பிரிந்து எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றதன்றோ? 'முக்ய ப்ராணன்' என்பதும் இந்த்ரியம் போல் ஒரு அசேதந வஸ்துவே. அது கண் காது முதலியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதென்பது, நாம் தூங்கும் காலத்தில் நடப்பதைப் பார்த்தால் தெரியும். தூங்கும்பொழுது நமது கண் காது முதலியவையெல்லாம் உபரதங்களாயிருக்கையில், ப்ராணன் மாத்ரம் ஓடிக்கொண்டிருக்கின்றதன்றோ?

---

4. [ப-ரை.] **ते** - அவைகள் [அந்த இந்த்ரியங்கள் முதலியவை], **अश्रद्दधाना बभूवुः** - [இதை] நம்பாதவர்களாக இருந்தார்கள். **सः** - அந்த ப்ராணன், **अभिमानात्** - அஹங்காராவேஶத்தால், **ऊर्ध्वम्** - உயர [தனது ஸ்தாநமாகிற தேஹத்திலிருந்து], **उत्क्रामत इव** - கொஞ்சம் வெளிப் புறப்படுவதுபோல பாவித்தது. **तस्मिन्** - அந்த ப்ராணன், **उत्क्रामति** - கிளம்பும்பொழுது, **अथ** - அப்பொழுதே, **इतरे सर्व एव** - மற்றை [ஆகாஶம் முதலியவை] எல்லாம், **उत्क्रामन्ते** - கிளம்பின; **तस्मिंश्च प्रतिष्ठमाने** - அது திரும்பி வந்தவுடன், **सर्व एव प्रतिष्ठन्ते** - அவைகளும் திரும்பி வந்தன. **तत्** - இது, **मक्षिकाः** - [அல்ப] கொசுக்கள், **मधुकरराजानम्** - தமக்கு அர

'एषोऽग्निस्तपति ; एष सूर्यः ; एष पर्जन्यो मघवान् ; एष वायुः । एष पृथिवी रयिर्देवः सदसच्चामृतञ्च यत् ॥ ५ ॥

'अरा इव रथनाभौ प्राणे सर्वं प्रतिष्ठितम् । ऋचो यजूँषि सामानि यज्ञः क्षत्रं ब्रह्म च ॥ ६ ॥

சன்போன்ற பெரிய வண்டை, **उत्क्रामन्तम्** - அது வெளிக் கிளம்புகையில் **सर्वा एवोत्क्रामन्ते** - தாமும் கிளம்பி, **तस्मिंश्च प्रतिष्ठमाने** - அது திரும்பவே, **यथा सर्वा एव प्रातिष्ठन्त** - எப்படித் திரும்பி வருகின்றனவோ, **एवं** - அம் மாதிரியே [இருந்தது] **ते वाङ्मनश्चक्षुःश्रोत्रञ्च** - [அப்பொழுது] அந்த வாக் முதலியவையெல்லாம், **प्रीताः** - [முக்ய ப்ராணனுடைய மாஹாத்ம்யத்தைப் பார்த்து] ஸந்தோஷம் அடைந்தவைகளாய், **प्राणम्** - முக்ய ப்ராணனை, **स्तुवन्ति** - ஸ்தோத்ரம் செய்தன.

---

5. இது முதல் இந்த ப்ரஶ்நம் முடியும் பர்யந்தம் இவை செய்யும் ஸ்தோத்ரமே. இந்த ஸ்தோத்ரத்தில் ப்ராணனை ஸூர்யனென்றும் சந்த்ரனென்றும் ஸத்தென்றும் அஸத்தென்றும் மோக்ஷமென்றும் இம் மாதிரி அதிவாதமாக அந்த இந்த்ரியங்கள் புகழ்வதாகச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதன் தாத்பர்ய மென்னவென்றால்: ஸூர்யன் முதலானவர்களுடைய குணங்களில் சிற்சில அம்ஶங்கள் ப்ராணனிடத்தில் காணப்படுகின்றன என்பதுதான்.

[ப - ரை.] **एषः** - இந்த முக்ய ப்ராணன், **अग्निः** - அக்நி ரூபமாக, **तपति** - தபிக்கிறார். **एषः** - இவர், **सूर्यः** - ஸூர்யனே. **एषः** - இவர், **पर्जन्यः** - மேகம்; **एषः** - இவர், **मघवान्** - இந்த்ரன் **एषः** - இவர், **वायुः** - வாயு. **एषः** - இவர், **पृथिवी** - பூமி. **एषः** - இவர், **रयिः** - ஜலமயமான, **देवः** - தேவன் [அதாவது சந்த்ரன்]. **एषः** - இவர், **सत्** - சேதந வஸ்து; **एषः** - இவரே, **असत्**- அசேதந வஸ்துவும். **अमृतमिति यत्**-மோக்ஷமென்று யாதொன்று உண்டோ, [**तत्**] **च** - அதுவும், **एषः** - இவரே.

---

6. [ப - ரை.] **रथनाभौ** - சக்ரத்தின் 'குடம்' என்று சொல்லப் படும் நாபியில், **अरा इव** - 'அரம்' என்று சொல்லப்படும் கால்கள்போல, **सर्वम्** - எல்லாம், **प्रतिष्ठितम्** - நிறுத்தப்பட்டிருக்கின்றது. [எதெல்லாம் என்றால்] **ऋचः** - ருக் வேதம், **यजूंषि** - யஜுர் வேதம், **सामानि** - ஸாம வேதம், **यज्ञः** - யஜ்ஞம், **ब्रह्म च क्षत्रञ्च** - ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸகல ப்ராணிகளும் [இவையெல்லாம் ப்ராணனிலேயே தரிக்கப்பட்டிருக்கின்றன]. வண்டிச் சக்ரத்தில் நடுவில் குடம், அதில் புதைக்கப்பட்டிருக்கும் அரக்கால்கள், அந்தக் கால்களின் வெளிமுனையில் கூர்வாங்கிக் கோக்கப் பட்டிருக்கும் வட்டை [நேமி] என்னும் சுற்றியிருக்கும் மரம், ஆக மூன்று பாகங்கள் உண்டு. இவ்விடத்தில் குடத்திற்கு ஸமாநமாக ப்ராண

'प्रजापतिश्चरसि गर्भे त्वमेव प्रतिजायसे । तुभ्यं प्राण प्रजास्त्विमा बलिं हरन्ति यः प्राणैः प्रतितिष्ठसि ॥ ७ ॥

'देवानामसि वह्नितमः पितॄणां प्रथमा स्वधा । ऋषीणाश्चरितं सत्यमथर्वाङ्गिरसामसि ॥ ८ ॥

னும், அரங்களுக்கு ஸமாநமாக ஸகல வஸ்துக்களும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அரங்கள் குடத்தில் தாங்கி நிற்பது போல் ஸகல வஸ்துக்களும் ப்ராணனில் தாங்கி நிற்கின்றன என்பது கருத்து. மற்றோர் உபநிஷத், அசேதந வஸ்துக்கள் சேதநனாகிற ஜீவனால் தாங்கப்பட்டிருப்பதையும், அந்த ஜீவன்கள் பரமாத்மாவால் நிலைபெற்று நிற்பதையும் இந்த உபமையைக்கொண்டே பேசுகின்றது. **"तद्यथाऽरेषु नेमिरर्पिता, नाभावरा अर्पिताः एवमेवैता भूतमात्राः प्रज्ञामात्रास्वर्पिताः प्रज्ञामात्राः प्राणेऽर्पिताः"** [எப்படி அரக்கால்களில் வட்டையும், அரக்கால்கள் நேமி என்னும் குடத்திலும் நிறுத்தப்பட்டு நிற்கின்றனவோ, அப்படியே அசேதந வஸ்துக்கள் ஜீவன்களிலும், ஜீவன்கள் பரமாத்மாவினிடத்திலும் நிலைபெற்றிருக்கின்றன]. இந்த வாக்யத்தில் காணப்படும் 'ப்ராணன்' என்னும் ஶப்தம் பரமாத்மாவைக் குறிக்கின்றது.

---

7. இதுபர்யந்தம் ப்ராணனைப் பார்த்து நேரில் ஸ்தோத்ரம் செய்யாமல் 'இவர்' என்று படர்க்கையாகக் குறித்து ஸ்தோத்ரம் செய்தார்கள். இதில் நேரில் ப்ராணனைப் பார்த்து நேரிலேயே முன்னிலையாகப் பேசுகிறார்கள்.

[ப - ரை.] **हे प्राण** - ஹே ப்ராணனே! [**त्वं** - நீ] **गर्भे** - கர்ப்பத்தில் **प्रजापतिः** - ப்ரஜைகளை [ப்ராணன் அபாநம் முதலிய ரூபமாக இருந்து] ரக்ஷித்துக்கொண்டு, **चरसि** - ஸஞ்சரிக்கிறாய். **त्वमेव** - நீயே, **प्रतिजायसे** - [புத்ராதி ரூபமாக] உண்டாகிறாய். **तुभ्यम्** - உனக்காகவே, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **बलिं** - அந்நம் முதலியவற்றை, **हरन्ति** - ஸமர்ப்பிக்கிறார்கள். [ஏனென்றால்] **यः** - யாதொரு [நீ], **प्राणैः** - ப்ராணநம் முதலிய வ்யாபாரங்களால், **प्रतितिष्ठसि** - [ஸகல ப்ரஜைகளிடத்திலும்] ப்ரதிஷ்டிதமாய் இருக்கிறாயோ.

---

8. [**त्वम्** - நீ], **देवानां** - தேவர்களுக்கு, **वह्नितमः** - ஹவிஸ்ஸைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ப்ரதாநனாக, **असि** - இருக்கிறாய். **पितॄणाम्** - பித்ருக்களுக்கு, **प्रथमा स्वधा असि** - முக்யமாக ப்ரீதி செய்கிறாய். **अथर्वाङ्गिरसां** - அதர்வாங்கிரஸ் முதலிய, **ऋषीणाम्** - ருஷிகளுக்கு, **सत्यम्** - உயர்ந்த **चरितम्** - அநுஷ்டாநமாக, **असि** - இருக்கிறாய். அதாவது: ருஷிகளுக்கு ப்ரீதிகரமான நித்ய நைமித்திக ரூபங்களான கர்மங்களை நீயே செய்விக்கிறாய்.

'इन्द्रस्त्वं प्राण ; तेजसा रुद्रोऽसि परिरक्षिता । त्वमन्तरिक्षे चरसि ; सूर्य-स्त्वं ज्योतिषां पतिः ॥ ९ ॥

'यदा त्वमभिवर्षस्यथेमाः प्राणते प्रजाः । आनन्दरूपास्तिष्ठन्ति कामा-यान्नं भविष्यतीति ॥ १० ॥

'व्रात्यस्त्वं प्राण, एकर्षिरत्ता विश्वस्य सत्पतिः । वयमाद्यस्य दातारः पिता त्वं मातरिश्व नः ॥ ११ ॥

'या ते तनूर्वाचि प्रतिष्ठिता या श्रोत्रे या च चक्षुषि या च मनसि सन्तता शिवान्तां कुरु । मोत्क्रमीः ॥ १२ ॥

---

9. [ப - ரை]. **हे प्राण** - ஹே ப்ராணனே ! **त्वमिन्द्रः** - நீ தான் பரமேஶ்வரன் : **तेजसा** - [ஸம்ஹரிக்கும்] தேஜஸ்ஸினால், **रुद्रोऽसि** - ருத்ரனாக இருக்கிறாய் ; **परिरक्षिता** - [சரியான காலம் வரும்பொழுது] ரக்ஷகனாகவும் இருக்கிறாய். **त्वम्** - நீ, **ज्योतिषां** - ப்ரகாசங்களாக இருக்கும் ஜ்யோதிஸ்ஸூக்களுக்கெல்லாம், **पतिः** - ஶ்ரேஷ்டனான, **सूर्यः** - ஸூர்யனாக இருந்துகொண்டு, **अन्तरिक्षे** - ஆகாஶத்தில், **चरसि** - ஸஞ்சரிக்கிறாய்.

---

10. [ப - ரை]. **प्राण** - ஹே ப்ராணனே ! **यदा** - எப்பொழுது, **त्वम्** - நீ, **अभिवर्षसि** - [மேகமாக இருந்துகொண்டு] மழை பெய்கிறாயோ, [**तदा** - அப்பொழுது], **ते** - உன்னுடைய, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **कामाय अन्नं भविष्यतीति** - யதேஷ்டம் அந்நம் கிடைக்குமென்று, **आनन्दरूपाः** - ஆநந்தத்துடன் கூடினவர்களாக, **तिष्ठन्ति** - ஆகிறார்கள்.

---

11. [ப - ரை]. **प्राण** - ஹே ப்ராணனே, **त्वम्** - நீ, **व्रात्यः** - ஸம்ஸ்காரமொன்றும் பெறாமல் இருக்கும் ப்ராஹ்மணனாகவும் இருக்கிறாய் ; **एकर्षिः** - முக்யமான மந்த்ர த்ரஷ்டாவும் [நீயே]. **विश्वस्य** - ஜகத்திற்கு, **अत्ता** - ஸம்ஹர்த்தாவாகவும் இருக்கிறாய் ; **सत्पतिः** - [முக்யமாக] ஸாது ஜநங்களெல்லாருக்கும் ரக்ஷகனாகவும் இருக்கிறாய். [**ते** - உனக்கு], **वयम्** - நாங்கள், **आद्यस्य** - சாப்பிடத் தகுந்த [அல்லது அநுபவிக்கத் தகுந்த] வஸ்துக்களின், **दातारः** - கொடுப்பவர்களாக இருக்கிறோம். **मातरिश्व** - ஹே வாயுவே ! **नः** - எங்களுக்கு, **त्वम्** - நீ, **पिताअसि** - போஷகனாயும் இருக்கிறாய்.

मातरिश्वन् இருக்கவேண்டியதற்கு, **मातरिश्व** என்று இருப்பது வைதிக ப்ரயோகம்.

---

12. [ப - ரை]. **वाचि** - வாக்கினால், **या ते तनूः** - யாதொரு உன்னுடைய ஶரீர ரூபமான ஶக்தியானது, **प्रतिष्ठिता** - நிலைபெற்று நிற்கின்றதோ, [அதாவது : வாக்கை நியமிக்கும்] அநுகூலமான ஶக்தி யாது

'प्राणस्येदं वशे सर्वं त्रिदिवे यत्प्रतिष्ठितम्। मातेव पुत्रान् रक्षस्व श्रीश्च प्रज्ञां च धेहि नः' ॥ १३ ॥

॥ इति द्वितीयः प्रश्नः ॥

ஒன்று உன்னிடம் இருக்கின்றதோ], **या श्रोत्रे** - யாதொன்று காதிலும், **या च चक्षुषि** - யாதொன்று கண்ணிலும், **या च मनसि** - யாதொன்று மநஸ்ஸிலும், **सन्तता [प्रतिष्ठिता]** - எப்பொழுதும் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றதோ, **ताम्** - அந்த ஶக்தியை, **शिवाम्** - மங்களகரமாக, **कुरु** - செய், **मा उत्क्रमीः** - [தேஹத்தைவிட்டு] வெளியில் போகும் ப்ரயத்நத்தை நிறுத்திவிடு.

---

13. [ப - ரை]. **इदं सर्वम्** - இந்த ஜகத் முழுவதும், **प्राणस्य वशे** ப்ராணனுகிற [உன்னுடைய] வஶத்தில் இருக்கின்றது. [அதாவது: உன் அதீநம்]. **यत् त्रिदिवे प्रतिष्ठितम्** - ஸ்வர்க்கம் முதலான லோகங்களில் எது எது இருக்கின்றதோ [அதுவும் உன் அதீநமே]. [ஆகையால்] **पुत्रान् मातेव** - குழந்தைகளைத் தாய் போல, **रक्षस्व** - [எங்களை] ரக்ஷிக்கவேண்டும். **नः** - எங்களுக்கு, **श्रीश्च** - ஸ்வ ஸ்வ கார்யங்களை நிர்வஹிக்கும் ஸாமர்த்யரூபமான ஶ்ரீயையும், **प्रज्ञाञ्च** - [அதற்கு அநுகூலமான] ப்ரஜ்ஞையையும், **धेहि** - செய்து கொடு. இவ்விடத்தில் '**श्रीः**' என்னும் முதல் வேற்றுமை, '**श्रियम्**' என்னும் இரண்டாம் வேற்றுமையின் அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது ப்ரஶ்நம் முற்றிற்று.

॥ श्रीः ॥

॥ प्रश्नोपनिषत् ॥

॥ तृतीयः प्रश्नः ॥

अथ हैनं कौसल्यश्चाश्वलायनः पप्रच्छ । "भगवन्! कुत एष प्राणो जायते? कथमायात्यस्मिन् शरीरे? आत्मानं वा प्रविभज्य कथं प्रातिष्ठते? केनोत्क्रमते? कथं ब्राह्ममभिधत्ते? कथमध्यात्मम्?" इति ॥ १ ॥

ஸ்ரீ:

மூன்ருவது ப்ரஶ்நம்

கீழ் ப்ரஶ்நத்தில் 'இந்த லோகத்திலும் ஸ்வர்க்க லோகத்திலும் எவை எவை ப்ரதிஷ்டிதங்களாக இருக்கின்றனவோ அவையெல்லாம் ப்ராணுதீநங்களாகவே இருக்கின்றன [प्राणस्येदं वशं सर्वं त्रिदिवं यत्प्रतिष्ठितम्] என்பது விளக்கப்பட்டது. அந்த ப்ராணனுடைய உத்பத்தியையும், அது ஶரீரத்தினுள் ப்ரவேஶிக்கும் ப்ரகாரத்தையும், அது ஶரீரத்தில் இருக்கும் காலத்தில் அது தன்னை விபாகித்துக்கொண்டு நிற்கும் ப்ரகாரத்தையும், அது ஶரீரத்தை விட்டு விலகும் மார்க்கத்தையும், அதன் வெளிப்பட்ட ரூபத்தையும், அதன் உள்பட்ட ரூபத்தையும் இவையெல்லாவற்றையும் இந்த ப்ரஶ்நம் விவரிக்கின்றது. இப்படி ப்ராணனைப் பற்றிய விஶேஷங்களை அறிந்து, அதிலிருந்து பரிஶுத்த ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்ந்து, அது வழியாக ப்ரஹ்மோபாஸநத்தை நிறைவேற்றி மோக்ஷத்தைப் பெறக்கூடும் என்பதை விளக்குவதே இந்த ப்ரஶ்நத்தின் தாத்பர்யம்.

1. [ப-ரை.] **अथ ह एनम्** - அந்தப் பிப்பலாதரை, **आश्वलायनः कौसल्यः** - அஶ்வலாயநருடைய புத்ரராகிய கௌஸல்யர், **पप्रच्छ** - கேட்டார். "**भगवन्** - ஹே பகவன், **एष प्राणः** - இந்த ப்ராணன், **कुतः** - எதிலிருந்து, **जायते** - உண்டாகிறது? **अस्मिन् शरीरे** - இந்த ஶரீரத்தில், **कथमायाति** - எப்படி வருகின்றது? **आत्मानं** - தன்னை, **कथं विभज्य प्रातिष्ठते** எப்படி விபாகித்துக்கொண்டு நிற்கின்றது? **केन उत्क्रामते** - எப்படி வெளிப்புறப்படுகின்றது? **कथं बाह्यमभिधत्ते** - எந்த வெளிப்பட்ட ரூபத்துடன் ஸந்நிஹிதமாயிருக்கின்றது? **कथमध्यात्मम्** [**अभिधत्ते**] - எவ்விதமான ஆந்தர ரூபத்துடன் நிற்கின்றது?" **दवि** - என்று.

तस्मै स होवाच । "अतिप्रश्नान् पृच्छसि । ब्रह्मिष्ठोऽसि इति तस्मात्तेऽहं ब्रवीमि ॥ २ ॥

"आत्मन एष प्राणो जायते । यथैषा पुरुषे छाया, एतस्मिन्नेतदाततं मनोऽकृतेनायात्यस्मिन् शरीरे ॥ ३ ॥

यथा सम्राडेवाधिकृतान्विनियुङ्क्ते एतान् ग्रामानेतान् ग्रामानधितिष्ठस्व' इति । एवमेवैष प्राण इतरान् प्राणान् पृथक् पृथगेव सन्निधत्ते ॥ ४ ॥

---

2. [ப - ரை.] **स ह** - அந்தப் பிப்பலாதர், **तस्मै उवाच** - அவனுக்கு மறுமொழி சொன்னதாவது: "[**त्वम्** - நீ], **अतिप्रश्नान्** - ப்ரஶ்நத்திற்குத் தகாதவைகளை [அதாவது - ரஹஸ்யார்த்தங்களை], **पृच्छसि** - கேட்கிறாய். **ब्रह्मिष्ठोऽसि** - நீ ப்ரஹ்மவித்தென்றே [நினைக்கின்றேன்]. **तस्मात्** - ஆகையால், **ते** - உனக்கு, **अहम्** - நான், **ब्रवीमि** - சொல்லுகிறேன்.

---

3. **एष प्राणः** - இந்த ப்ராணன், **आत्मनो जायते** - பரமாத்மாவிடமிருந்தே உத்பத்தி பெறுகின்றது. [இது முதல் கேள்விக்கு ஸமாதானம். மற்றோரிடத்தில் இம்மாதிரியே சொல்லப்பட்டிருக்கின்றது. **एतस्माज्जायते प्राणः** - இந்த வாக்யத்தில் **एतस्मात्** (இதனிடமிருந்து) என்பது பரமாத்மாவையே குறிக்கின்றது என்பது ப்ரகரணத்திலிருந்து விளங்கும்]. இதற்கு மேல் இரண்டாவது ப்ரஶ்நத்திற்கு ஸமாதானம். **यथा एषा पुरुषे छाया** - எப்படிப் புருஷனிடம் நிழலோ [அதாவது - எப்படிப் புருஷனுடனே நிழலானது வேறு ஸாமக்ரியின் ஸஹாயமின்றிக்கே போகின்றதோ], [**यथा** - எப்படி] **एतस्मिन्** - புருஷனிடத்தில், **एतत्** - இந்த, **मनः** - மநஸ்ஸானது, **अकृतेन** - ஒருவித யத்நமுமின்றிக்கே **आततम्** - [பிரியாமல்] சேர்ந்திருக்கின்றதோ, [**एवम्** - அப்படியே, **प्राणोऽपि** - ப்ராணனும், **अकृतेन** - பிரியாமலே], **अस्मिन् शरीरे** - இந்த ஶரீரத்தில், **आयाति** - வருகின்றான். [மநஸ்ஸும் ப்ராணனும் ஜீவனுடன் கூடவே ஶரீரத்தில் ப்ரவேஶிக்கின்றன. ஆகையால் ஜீவன் ஶரீரத்தை விட்டு விலகினால் ப்ராணனும் அவனுடன் விலகிவிடும்; ப்ராணன் விலகுவதற்கு வேறு ஒரு காரணமும் தேவையில்லை. மநஸ்ஸும் அப்படியே.]

---

4. [ப - ரை.] மூன்றாவது கேள்விக்கு ஸமாதானம் சொல்லப்படுகின்றது. **यथा** - எப்படி, **सम्राट्** - ஒரு சக்ரவர்த்தி, **कार्येषु अधिकृतान्** - கார்யங்களில் நியமிக்கப்பட்டிருப்பவர்களை [அதாவது: தனது ஸேவகர்களை], '**इमान् ग्रामानधितिष्ठस्व, इमान् ग्रामानधितिष्ठस्व** - இந்த க்ராமங்களை நீ பார்த்துக் கொள், இந்த க்ராமங்களை நீ பார்த்துக் கொள்', **इति** - என்று, **विनियुङ्क्ते** - நியமிக்கிறானோ, **एवमेव** - அப்படியே, **एष प्राणः** - இந்த ப்ராணன், **इतरान् प्राणान्** - மற்றை ப்ராணன்களை, **पृथक् पृथगेव**-

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையின் வார்ஷிக மஹோத்ஸவங்கள்.

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபையை முன்னிட்டு, வகுளாரண்ய க்ஷேத்ர மென்று சொல்லப்படும் ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருவடிவாரத்தில், இப்பொழுது ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுல் அத்யந்த க்ருபையுடன் ஸ்தாபிதமாயிருக்கும் ஸம்ஸ்க்ருத கலாஶாலை ப்ரதி ஸம்வத்ஸரம் அபிவ்ருத்தி யடைந்து இதுகாறும் விலக்ஷணமாக நடந்துவருவது ஆஸ்திகர் பலருக்கு ஸுவிதிதம். சென்ற மாசிமீ 20வ [3—3—45] யன்றும், அந்த மீ 28வ [11—3—45] யன்றும் அந்தக் கலாஶாலையின் மூன்ருவது வார்ஷிக மஹோத்ஸவங்கள் அங்குக் கொண்டாடப்பட்டன. முதல் திநத்தில் மயிலாப்பூர் அட்வொகெட் ஸ்ரீ. உப. எஸ். வெங்கடேச ஐயங்கார் ஸ்வாமியும், இரண்டாவது திநத்தில் ஸ்ரீ தேஶிக ஸித்தாந்த துரந்தரர் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும் அக்ராஸநம் வஹித்தார்கள். வித்யாரத்நாகரம் கொடைவாசல் ஸ்ரீ உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ‘வேதத்தின் மஹிமை’ என்னும் விஷயத்தைப் பற்றியும், மதுரை அட்வொகெட் ஸ்ரீ. உப. என். ஆர். க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி ‘ஸ்ரீ தேஶிகனும் தமிழும்’ என்னும் விஷயத்தைப் பற்றியும் முறையே அவ்விரண்டு நாட்களிலும் உபந்யாஸம் செய்தார்கள். அநேக வித்வாங்களும் ப்ரபுக்களும் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து உத்ஸவத்தைச் சிறப்பித்தார்கள். இரண்டாவது திநத்தில் ‘கல்யாணபிவர்த்தநீ’ ஸங்கத்தின் வார்ஷிகக் கொண்டாட்டமும் நடைபெற்றது.

* * * *

ஐகமத்ய ரஸம்

‘ஐகமத்ய ரஸம்’ என்னும் பெயருள்ள ஒரு க்ரந்தத்தை நாம் வரப்பெற்ருேம். அது, காஞ்சீ வித்வான் ஸ்ரீ உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் இயற்றப்பெற்றது. அந்த க்ரந்தத்தின் விஷயமென்னவென்ருல்—நாம் எல்லோரும் ஶுத்தமான மநோபாவத்துடன் ஏக மதிகளாகவே வர்த்தித்து வரவேண்டும் என்பதே. ஜகத்தில் இப்பொழுது தென்படும் ஸ்திதியைப் பார்த்தால் ஐகமத்யம் ஆத்யந்திக லோபத்தை அடைந்துவிட்டதோவென்று நினைக்கும்படியாக இருக்கிறது. அல்ப விஷயங்களிற்கூட ஜநங்களுக்

குள் ஒருவருக்குத் தோன்றுவது போல் மற்றொருவருக்குத் தோன்றாமல், பற்பல மதிபேதங்கள் ஜநித்து எல்லாரும் ஒருவரோடொருவர் சச்சரவு செய்து வருவதை நாம் பார்க்கிறோம். படியாத மந்த ப்ரஜ்ஞர்களுக்குள் மாத்ரம் இம்மாதிரி மதிபேதம் ஜநிக்கிறது என்பது இல்லை; படித்தவர்களுள்ளும் இம்மாதிரி தோஷங்கள் பரவி வருகின்றன. ஸமீபகாலத்தில் இரண்டு வித்வான்கள் தம்மைத் தூஷித்துக்கொள்வதுடன் நிற்காமல், ஒவ்வொருவரும் மற்றொருவருடைய பூர்வாசார்யர்கள்மீதும் அஜ்ஞதையை ஏற்றி வ்யாஸங்களை வெளியிட்டதைப் பலர் பார்த்திருக்கலாம். அதைப் பார்த்தே ப்ரக்ருத க்ரந்த கர்த்தா நிர்வேத மடைந்து 'ஐகமத்ய ரஸ'த்தை ப்ரசுரம் செய்திருக்கிறார். ஒருவர், தமது ஆசார்யர்களுடைய குணங்களையும் அவர்களால் விளக்கப்பட்டுள்ள அர்த்த விஶேஷங்களையும் புகழ்ந்து பேசவேண்டுமானால், இதர மதஸ்தாபனாசார்யர்களைத் தூஷித்துப் பேசியே ஆகவேண்டுமோ? 'ஒருவருடைய மனமும் நோகாதபடி எழுதுகிற முறைமை உலகில் இல்லையா?' என்று அந்த ஸ்வாமி கேட்கிறார். இது கேட்கவேண்டிய கேள்வியே. "प्रियं ब्रूयात्" [ப்ரியமான வார்த்தைகளையே பேசவேண்டும்] என்று ஶாஸ்த்ரம் விதிக்கின்றது. ஸாமாந்ய ஜநங்கள் விஷயத்திலேயே இது அன்வயிக்குமானால், மஹான்கள் விஷயத்தில் கேட்கவேண்டுமோ? ஸௌஹார்த்த வாழ்க்கைக்குக் கடுவான உக்திகள் ஹேதுவாகுமோ?

நிற்க: "आचार्यादिह देवतां समधिकामन्यान्न मन्यामहे" என்கிறபடி ஆசார்யர்களெல்லாரும் அவதார புருஷர்களென்றே நாம் அறிகின்றோம். அவர்களைக் கீழ்ப்படுத்திக் கூறுவது மஹத்தான பாகவதாபசாரமாகு மன்றோ? பகவதுபக்ரமமாக வருகிற கைங்கர்ய ரூபமான புருஷார்த்தத்திற்கு, ஶாஸ்த்ரானுஜ்ஞாதமான பாகவத கைங்கர்யமே எல்லை நில மென்பதன்றோ ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸித்தாந்தம்? எம்பெருமான் அநேக அவதாரங்களைச் செய்து ப்ரத்யக்ஷமாக எழுந்தருளியிருக்கும்போதும், அநேக ஜநங்கள் யதாவஸ்திதமான ஶேஷத்வஜ்ஞான மின்றிக்கே இருந்தார்கள். உடையவர் அவதரித்தபின்பே எல்லாரும் ஶேஷத்வத்தின் பரா காஷ்டையை நன்கு உணர்ந்து பாகவத தாஸ்யத்தில் விஶேஷமான ருசியைப் பெற்று விளங்கினார்கள். அந்தப் பாஷ்யகாரருடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவர்கள் நாம் எல்லாருமென்று சொல்லிக்கொண்டு அவருடைய ஸித்தாந்தத்திற்கு விருத்தமாக நடப்பது நமக்கு லக்ஷணமாகுமா?

இந்தத் தோஷங்களை நன்றாக அறிந்துள்ள பெரியோர்களும் அவைகளை அல்பமென்று எண்ணியோ இல்லாவிட்டால் ஸம்மோஹத்தால் ஸ்ம்ருதி ப்ரம்ஶம் அடைந்தோ, நிந்த்யமான இந்த வ்யாபாரத்தில் ப்ரவர்த்திக்கிறார்கள். இது மிகவும் ஶோசநீயம். ஜன்மாந்தர வாஸனையால் காமமும் க்ரோதமும் நம்மை ஆக்ரமிப்பது போல, அஸூயை என்னும் பிஶாசமும் நம்மைச் சிற்சில ஸமயங்களில் மடக்கு

கின்றது. இது, கவித்வ மத கஶ்மலம் முதலான நான்குவித பாண்டித்யங்களுள் ஒன்றென்றும் அவைகளிலிருந்து நிர்வேதமடைந்து நிரவக்ரஹமான நிப்ருத வ்ருத்தியை அடைவதே யோகதசையின் பரிபாகமென்றும் ஸ்ரீ தேஶிகன் அருளிச்செய்திருக்கிறார். அந்தத் தசையை அடைய ப்ரயத்நப்படுவதன்றோ நமது ஸ்வரூபத்திற்கு அழகு? அதற்கு விருத்தமாக மஹான்களை நிந்தித்து அதனால் நமக்கு ஒரு வித ஏற்றத்தை ஸம்பாதித்துக்கொள்ள ப்ரயத்நப்படுவது நமக்கே லாகவத்தை விளைவிக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. ஆத்ம ஶ்ரேயஸ்ஸுக்கும் இது மிகவும் பாதகம். "अवज्ञार्थमनर्थाय महतां दोषचिन्तनम्" நிரந்தரமான பகவத் பாகவத கைங்கர்யத்தில் நிரதர்களாகவும், பகவத் பாகவதர்களைத் தவிர்த்து மற்றொன்றிலும் போக்ய புத்தியைச் செய்யாதவர்களாகவும், பகவத் பாகவதாநுபவராகத்தால் ஆர்த்ரமான மநோ பாவத்தை உடையவர்களாகவும் பாகவத ஶேஷத்வத்தையே எப்பொழுதும் ப்ரார்த்திதிருப்பவர்களாகவும் நாம் வர்த்தித்து வரும்படியான காலமும் வருமோ?

* * * *

ஒரு விஞ்ஞாபநம்

இப்போது சிறிது காலமாகக் காகிதப் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக நமது பத்ரிகையில் பல ஜ்ஞாதாக்களால் எழுதப்பட்டு வரும் வ்யாஸங்களை ப்ரசுரிக்கமுடியாமல் இருந்து வருகிறது. பத்ரிகையில் ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் எட்டுப் பக்கங்களே வெளியாகின்றன. இதில் அநேக பண்டிதர்கள் தாம் அனுப்பியுள்ள வ்யாஸங்கள் விரைவில் வெளிவரவில்லையென்று குறையும் கூறுகின்றனர். வெளியிடுவதற்கு அர்ஹங்களான வ்யாஸங்களெல்லாவற்றையும் விளம்பிதமாகவாவது ப்ரசுரம் செய்வதற்கு உரிய ப்ரயத்நத்தை நாம் செய்தே வருகின்றோம். பத்ரிகையோ மாஸம் ஒரு முறையே வெளிவருவது. பக்கங்களின் ஸங்க்யையோ அத்யல்பம். இம்மாதிரியாகப் பல ஶ்ரமங்கள் இருப்பதை ஆலோசித்து நமது ஸுஹ்ருத்துக்கள் விளம்பக்ஷமராக எழுந்தருளியிருக்க வேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

மற்றுமொரு விஷயம். நமது ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையின் சந்தாதாரர்களுட் சிலர், 1944-ம் வர்ஷத்துச் சந்தாத் தொகையை இன்னும் செலுத்தாமல் இருக்கிறார்கள். 1945-ம் வர்ஷம் ஆரம்பித்து மூன்று மாஸங்களாகிவிட்டன. இந்த மாஸத்திற்குள்ளாவது அவர்கள் தமது சந்தாக்களைச் செலுத்த க்ருபை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். ஸர்க்கார் அதிகாரிகள் இந்த மாஸம் முதல் நமது பத்ரிகையில் 20 பக்கங்கள் அச்சுப் பதிப்பிக்கலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். அந்த உத்தரவு விளம்பித்துக் கிடைத்தபடியால், ப்ரசுரம் செய்வதற்கு ஸித்தமாயிருந்த விஷயங்களைக் கொண்டு இப்பொழுது அந்தப் பக்கங்களைப் பூர்த்தி செய்தோம்.

Regd. No. M. 4437

அடுத்த ஸஞ்சிகை முதல் யதாபூர்வம் வேறு வ்யாஸங்களும் ப்ரசுரிக்கப்படும். வித்வான்களும் ஏற்கெனவே பல பெயர்களால் விசாரிக்கப்பட்டுள்ள விஷயங்களையே மறுபடியும் விசாரியாமல், புதிதாகக் கட்டுரைகளை எழுதியும், அத்யாத்ம விஷயமாகவோ வேறு விசாரார்ஹ விஷயமாகவோ பல பெயர்களால் ஆஶங்கிக்கப்படும் ஶங்கைகளைக் கூலங்கஷமாக விசாரித்தும் வ்யாஸங்களை அநுக்ரஹித்தால் அது ஸ்ரீ ப்ரியையைப் படிக்கும் நமது ஸுஹ்ருத்துக்களுக்கு மிகவும் ரஸிக்குமென்று விண்ணப்பம் செய்துகொள்ளத் துணிகின்றோம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கும் புஸ்தகங்கள்.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. ஷை (பைண்டில்லாதது)	5—8—0	6—8—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் .... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	0—8—0	0-12—6
7. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G.T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras